வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் MCOP. No. 57/2025

வழக்கு சாட்சி – ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு.ஐயப்பன் | தொழில் | :: விவசாயம் |
| த பெயர் | :: T.பாக்கியம் | வயது | :: 43 |
| கிராமம் | :: பிரப்பன்வலசை | | |
| தாலுகா | :: இராமநாதபுரம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 05.03.2026.

**முதல் விசாரணை** (நேரம் : நண்பகல் 12.55 மணி)

நான் இளவர் மனுதாரரின் தகப்பனார் ஆவேன், என்னுடைய சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்துகள் என்னுடையவைதான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.1. இளவர் மனுதாரரின் ஆதார் அட்டை ஜெராகஸ் நகல் ம.சா.ஆ.2. எனது குடும்ப அட்டை ஜெராகஸ் நகல் ம.சா.ஆ.3. எனது வாகனத்தின் பதிவுச்சான்று ஜெராகஸ் நகல் ம.சா.ஆ.4. என்னுடைய வாகனத்தை ஓட்டிச்சென்ற வசுமதியின் ஓட்டுநர் உரிமம் ஜெராகஸ் நகல் ம.சா.ஆ.5. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் ஜெராகஸ் நகல் ம.சா.ஆ.6. 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச்சான்று ஜெராகஸ் நகல் ம.சா.ஆ.7. 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடுச்சான்று ஜெராகஸ் நகல் ம.சா.ஆ.8. Discharge Summary ஜெராக்ஸ் ம.சா.ஆ.9. மருத்துவ பில்கள் ம.சா.ஆ.10 வரிசை (35 எண்ணிக்கை). மனுதாரருடைய ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.05 17:46:59 +0530

விபத்து சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. சாட்சி வசுமதி சொன்னதன் அடிப்படையில் தான் போலீஸ் விசாரணையிலும், இழப்பீடு மனுவிலும் விபத்து பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சாட்சி வசுமதியின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சமயம் 2ம் எதிர்மனுதாரர் வாகனம் 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் மட்டும் தான் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் எதிர்மனுதாரர்கள் அனைவரும் சேர்ந்து தான் கொடுக்கனும். மனுவில் பல்வேறு தலைப்புகளில் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 எதிர்மனுதாரரை பொறுத்து மனு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.03.05 17:47:07 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.